**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2752/ஆ5/2024, நாள். 11.07.2024**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – 2022-2023ம் ஆண்டு மான்யக் கோரிக்கை அறிவிப்பு – மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு தமிழ் கையெழுத்துப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்குதல் – மாவட்ட அளவில் தமிழ் கையெழுத்து போட்டிகள் நடத்துதல் – விவரம் தெரிவித்தல் – சார்பு

பார்வை

1. தமிழ் வளர்ச்சி துறை மானியக் கோரிக்கை எண். 46, அறிவிப்பு எண். 12 நாள். 19.04.2022
2. அரசாணை (நிலை) எண். 50, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1,1) துறை நாள். 29.02.2024
3. சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் கடித ந.க.எண். 52447/எம்/இ1/2022, நாள். 03.07.2024

•••••

தமிழ் வளர்ச்சி துறையின் 2022-2023ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பில் பள்ளிகளில், பயிலும் மாணவர்கள் தமிழ் மொழியை அழகாக எழுதி வருபவர்களை ஊக்குவிக்கவும், இதனடிப்படையில் பிற மாணவர்களுக்கு தமிழில் அழகாக எழுதும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் 6 முதல் 9-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் மற்றும் 10 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் என இரு குழுக்களாக இப்போட்டியில் கலந்துக் கொள்ள வேண்டும் எனவும், வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கீழ்காணும் படி பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்க வேண்டும் என பார்வை 2-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 26.07.2024 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.00 மணி அளவில் வேலூர், அரசு (முஸ்லீம்) மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் மாவட்ட அளவிலான தமிழ் கையெழுத்துப் போட்டியில் 6 முதல் 9-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களில் ஒருவர் எனவும் மற்றும் 10 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களில் ஒருவர் என ஒரு பள்ளிக்கு இரண்டு மாணவர்கள் கலந்துக் கொள்ள வேண்டும், போட்டியில் பங்கு பெறும் மாணவர்கள் சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியடமிருந்து உரிய அனுமதிக் கடிதம் பெறுதல் வேண்டும்.

| பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் விவரம் | | | |
|---|---|---|---|
| 6 முதல் 9-ம் வகுப்பு வரை | | 10 முதல் 12-ம் வகுப்பு வரை | |
| முதல் பரிசு | ரூ. 3000/- | முதல் பரிசு | ரூ. 4000/- |
| இரண்டாம் பரிசு | ரூ. 2000/- | இரண்டாம் பரிசு | ரூ. 3000/- |
| மூன்றாம் பரிசு | ரூ. 1000/- | மூன்றாம் பரிசு | ரூ. 2000/- |

<u>தமிழ் கையெழுத்துப் போட்டிக்கான வரையறைகள் –</u>

I. பள்ளிக் கல்வி துறையின் கீழ் செயல்படும் அனைத்துவகைப் பள்ளிகளில் 6 முதல் 9-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் மற்றும் 10 முதல் 12-ம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்கள் என இரு குழுக்களாக இப்போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும்.

II. தமிழ் கையெழுத்துப் போட்டியில் பங்குபெறும் மாணவர்களுள் வல்லுநர் குழுவால் தெரிவு செய்யப்படும் சிறந்த 3 மாணவர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

III. போட்டி நடத்துபவர்களால் வழங்கப்படும் தமிழ் பத்திகளை முழு விடைத்தாளில் மூன்று பக்கங்களுக்கு மிகாமல் எழுத வேண்டும். (இதனுள் இரு கவிதைகள் அமைந்திருக்கும்)

IV. மேலும் போட்டி நடத்துபவர் மேற்குறிப்பிட்ட தமிழ்ப் பத்திகள் மற்றும் கவிதைப் பத்திகள் படிப்பதாகவும் மாணவர்கள் அதைக் கேட்டு எழுதம் முறையிலும் போட்டி நடத்த அனுமதிக்கப்படுகிறது.

V. இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் எழுத்துப்பிழையின்றியும் ஒற்றுப் பிழையின்றியும் படிப்பவர்க்கு வார்த்தைகள் புரியும்படியும் எழுத வேண்டும்.

VI. இப்போட்டிக்கான காலவரையறை ஒரு மணி நேரம் ஆகும்.

VII. போட்டியின்போது வழங்கப்படும் விடைத்தாளில் மட்டுமே எழுத வேண்டும். மேலும் தேர்வு நாளன்று வழங்கும் விடைத்தாளில் இடைக்கோடுகளும் வண்ண மையினால் கோடுகள் இட்டும் எழுதக் கூடாது.

VIII. நீல வண்ண மைபேனா (அ) மையூற்றுப் பேனாவால் மட்டுமே எழுத வேண்டும். வேறு வண்ண மைபேனா, ஓவிய எழுத்தாணிகள், துணைக் கருவிகளையோ பயன்படுத்தி எழுதக் கூடாது.

IX. போட்டியில் பங்கு பெறும் மாணவர்கள் சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியடமிருந்து உரிய அனுமதிக் கடிதம் பெறுதல் வேண்டும். ஒரு பள்ளிக்கு இரண்டு மாணவர்களை மட்டுமே பரிந்துரை செய்ய வேண்டும்.

எனவே மாணவர்கள் தமிழ் கையெழுத்துப் போட்டில் கலந்துக்கொள்வதற்கு மேற்காண் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வரையறைகளை மாணவர்களுக்கு தெரிவித்து போட்டியில் கலந்துக்கொள்வதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

12/7/24

12-07-24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலைக் கல்வி)
   மாவட்டக் கல்வி அலுவலகம்,
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது.)
2. பள்ளித் துணை ஆய்வாளர்,
   முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர்.
3. தலைமையாசிரியர்,
   அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி வேலூர்.
   ( மாவட்ட அளவில் போட்டிகள் நடைபெறுவதற்கான போதிய வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.)